DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Magistrate No.II. Srivilliputtur

C.C.No.397/2021

Deposition of witness for PW.2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | திரு.தர்மராஜ் | சாதி | .. | |
| த.பெ. | .. | | சமயம் | .. | |
| கிராமம் | .. | | தொழில் | .. | |
| தாலுகா | .. | | வயது | .. | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 1.7.2022

மு.வி – நான் தற்போது திருவில்லிபுத்தூரில் வனக்காப்பாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்ற வருகிறேன். கடந்த 6.3.2014 ம் தேதி நான் வன காப்பாளராக திருவில்லிபுத்தூர் வனச்சரக அலுவலகத்தில பணிபுரிந்தபோது 6.3.2014 ம் தேதி யானை தொந்தரவு அதிகமாக இருப்பதாக கூறி என்னை Ranger officer கூப்பிட்டுக்கொண்டு உன்னிபட்டி சராகம் சென்றார்கள். அப்போது யானை அலறல் சத்தம்கேட்டு நாங்கள் மாந்தோப்பிற்கு சென்றபோது யானை பிளிறி சாய்ந்து கொண்டிருந்ததை நான் பார்த்தேன். எலக்ட்ரிக் கம்பியால் கொக்கி போட்டு இழுக்கப்பட்டிருந்ததை பார்த்தேன். அந்த சம்பவ சமயத்தில் நான் தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 2 எதிரிகளை பார்த்தேன். அப்போது நாங்கள் 2 எதிரிகளை பிடித்துவிட்டு கம்பிகளை கைப்பற்றி விட்டு வேட்டை தடுப்பு காவலர்களை இறந்துபோன யானையின் பாதுகாப்பிற்காக வைத்து விட்டு நாங்கள் 2 எதிரிகளை அலுவலகத்திற்கு அழைத்து சென்றோம். கிராம நிர்வாக அலுவலர், DFO, CCF, EB Office மற்றும் கால்நடை மருத்துவர் ஆகியோருக்கு சம்பவத்தினை பற்றி போன் மூலமாக தகவல் சொன்னோம். பின்பு மேல்கூறிய அனைத்து அலுவலர்களும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள்.,

சம்பவ இடத்திலேயே பிரேத பரிசோதனை நடைபெற்றது. 7.3.2014 ம்தேதி கைது செய்யப்பட்ட 2 எதிரிகளை காவல் அடைப்பிற்காக திருவில்லிபுத்தூர் நீதித்துறை நடுவர் எண்.2 யிடம் கொண்டு சென்றோம். 15 நாட்கள் நீதிமன்ற காவலில் 2 எதிரிகளும் remand செய்யப்பட்டார்கள்.